## நிதிய முகாமையாளரின் மீளாய்வு

### பொருளாதார மீளாய்வு

இலங்கையின் பொருளாதாரமானது ஆறு தொடர்ச்சியான மொ.உ.உ. இலான சுருக்கத்தினைத் தொடர்ந்து 2023 இன் 3ஆம் காலாண்டில் 1.6%[1] ஆல் வளர்ச்சியடைந்தது. வளர்ச்சியானது மூன்று பிரதான பொருளாதாரத் துறைகளின் விரிவாக்கத்தினால், விசேடமாக விவசாயத் துறை, உந்தப்பட்டது. இதன் பிரகாரம், விவசாய, கைத்தொழில் மற்றும் சேவை நடவடிக்கைகள் 2023 இன் 3ஆம் காலாண்டில் முறையே 3%[1], 0.3%[1], 1.3%[1] இனால் விரிவடைந்தது. பரிமாற்றல் வீதங்களிலான சாதகமான மாற்றங்கள், குறைவான வட்டி வீதங்கள் மற்றும் பணவீக்கத்திலான மிதமான நிலை என்பன வளர்ச்சிக்கான எதிர்பார்ப்புக்களை மேம்படுத்தியது. உலக வங்கியானது இலங்கையின் பொருளாதாரம் 2024 இல் 1.7% ஆல் விரிவடையும் என எதிர்பார்க்கின்றது. சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணமனுப்பல்களிலான வலுவான உட்பாய்ச்சல்கள் 2024 இல் வளர்ச்சிக்கு நன்றாக அமையும்.

### வட்டி வீதச் சூழல்

இலங்கையின் பொருளாதாரமானது சுதந்திரம் அடைந்ததன் பின்னரான வரலாற்றில் அதன் மோசமான நிதியியல் நெருக்கடிக்கு முகங்கொடுத்தது. இதன்போது பணவீக்கம் அதிக உயர்வடைந்தும் அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் சாதனையான குறைந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தும் காணப்பட்டன. பொருளாதாரத்தினை நிலைப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை வீதங்களை 1050[3] அடிப்படை புள்ளிகளினால் மே 2023 வரைக்கும் அதிகரித்தது. பாரிய பொருளாதார அடிப்படைகள், நடந்துகொண்டிருந்த நாணய இறுக்கமடைதல் நடைமுறைகளுக்கு சாத்தியமாக எதிர்வினையாற்றியதுடன், பணவீக்கமானது எதிர்பார்த்த கட்டத்திலும் பார்க்க விரைவாக மிதமான நிலையினை அடைந்தது. விலைகள் மிதமான நிலையினை அடைந்ததன் காரணமாக, இலங்கை மத்திய வங்கி ஜுன் 2023 இலிருந்து கொள்கை வீதங்களை 650[3] அடிப்படை புள்ளிகளினால் குறைத்து இறுதியாக இடம்பெற்ற நாணயக் கொள்கை மீளாய்வின் பிரகாரம் நிலையியல் வைப்பு வசதி வீதத்தினை (SDFR) மற்றும் நிலையியல் கடன் வழங்கல் வசதி வீதத்தினை (SLFR) முறையே 9.00%[4] மற்றும் 10.00%[4] ஆக பராமரிப்பதற்கு தீர்மானித்தது. நாணயக் கொள்கையினை மேலும் தளர்த்தும் வழிமுறையானது சமீப காலங்களில் இடைநிறுத்தப்படும் எனவும், இதுவரைக்கும் பொறுப்பேற்கப்பட்ட நாணயக் கொள்கை தளர்த்தல் வழிமுறைகளுக்கு அமைய சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கி மேலும் செம்மையாக்கப்படுவதற்கு விடப்படலாம் எனவும் நாம் நம்புகின்றோம். இதன் பிரகாரம், மேம்பட்ட சந்தை திரவத்தன்மை மற்றும் பணவீக்கத்திலான அடக்கப்பட்ட கேள்விப் பக்கத்திலான அழுத்தங்களினால் துணையளிக்கப்பட்டு மத்திய காலத்தில் சந்தை வட்டி வீதங்கள் கொள்கை வீதங்களுடன் ஒன்றிணையும் என நாம் நம்புகின்றோம்.

மேலும், அரசாங்கப் பிணையங்களிலான விளைவுகள், இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளுக்கும் மற்றும் ச.நா.நி. மற்றும் ஏனைய அபிவிருத்தி பங்காளிகளிடமிருந்து பெறப்பட்ட நிதிகளுக்கும் பதிலளிக்கும் விதமாக வீழ்ச்சியடையும் இடர் வட்டத்தினால் துணையளிக்கப்பட்டு ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினை அவதானித்தது.

வங்கியியல் துறையினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட நிலுவையிலுள்ள கடனானது ஜுன் 2023 இலிருந்து குறிப்பிடத்தக்களவு விரிவடைந்துள்ளதுடன் முன்னோக்கிய காலத்தில் மேலும் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**பணவீக்கம்**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியினால் (CCPI,2021 = 100) அளவிடப்படும் தலைப்புப் பணவீக்கமானது டிசம்பர் 2022 இல் காணப்பட்ட 59.20%[2] இலிருந்து டிசம்பர் 2023 இல் 4%[1] ஆக நிறைவடைந்தது. டிசம்பர் 2023 இல் உணவுப் பணவீக்கமானது வருடத்திலிருந்து வருடம் 0.3%[5] ஆல் அதிகரித்துள்ளவேளை உணவல்லாத பணவீக்கமானது 5.8%[5] ஆல் வீழ்ச்சியடைந்தது. ஜனவரி 2024 இலிருந்தான பெறுமதி சேர்த்தல் வரியிலான (பெ.சே.வ.) அதிகரிப்பின் (15% இலிருந்து 18% ஆக) காரணமாக மற்றும் அத்துடன் சேர்த்து பெ.சே.வ. இலான பல விலக்களிப்புகள் அகற்றப்பட்டதனால், சமீபத்தைய காலத்தில் பணவீக்கத்தில் ஒரு தடவையிலான மேல் நோக்கிய வேகம் எதிர்பார்க்கப்படுவதுடன், இது தற்காலிகமானது எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**வெளிவாரித் துறை**

2023 இல் வெளிவாரித் துறையானது ஒரு கணிசமான மேம்பாட்டினை கண்டது. தொழிலாளர் பணமனுப்பல்களிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் சுற்றுலாத் துறையிலான உயர் வருமானங்களும் வெளிவாரித் துறைக்கு துணைபுரிந்தன. நாட்டின் மொத்த அதிகாரபூர்வ ஒதுக்கங்கள் டிசம்பர் 2023 இல் அமெரிக்க டொலர் 4.4[3] பில்லியனாக அதிகரித்தது. இது பயன்பாட்டிலான நிபந்தனைகளுக்குட்பட்ட சீனாவின் பீபள்ஸ் வங்கியிடமிருந்தான பரிமாற்றல் வசதியான அமெரிக்க டொலர் 1.4[7] பில்லியனையும் உள்ளடக்குகின்றது. 2023 இன் போது அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலான வெளிநாட்டு முதலீடானது தேறிய உட்பாய்ச்சலாக USD 210[7] மில்லியனை பதிவுசெய்தது. அதேசமயம், நாணயமாற்று விகிதமானது இவ்வாண்டின்போது 12.1%[7] மதிப்பேற்றத்தினை பதிவுசெய்து 2023 இன் இறுதியில் LKR 323.92/USD[7] ஆக காணப்பட்டது.

## CTCLSA இன்கம் வன்ட் (ஆரம்பம்: 26 ஜூலை 2021)

### நிதிய முகாமையாளர்

குகன் விநாயகசுந்தரம்

### நிதியத்தின் குறிக்கோள் மற்றும் அளவுகோல்

CTCLSA இன்கம் வன்ட் இன் முதலீட்டு குறிக்கோளானது ஒரு மிதமான மட்டத்திலான இடரைக் கொண்ட நிலையான வருமானப் பிணையங்களின் தேக்கத்தில் முதலீடு செய்வதன் மூலம் ஒரு வருடாந்த வருமானத்தினை வழங்குவதாகும். நிதியத்தின் இடர் மற்றும் விளைவுத் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு அலகுடைமையாளர்களுக்கு ஒரு பொருத்தமான விளைவினை வழங்குவதற்காக நிதியமானது கூட்டாண்மை கடன் மற்றும் அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யும்.

### கருத்துரை

2023 இன் போது, CTCLSA இன்கம் வன்ட் அதன் முதலீட்டாளர்களுக்கு ஒரு வருடாந்திர விளைவாக 26.13%[15] இனை வழங்கியது. நிதியமானது பிரதானமாக அரசாங்கப் பிணையங்களிலும் மற்றும் முதலீட்டுத் தரம் மற்றும் அதற்கு மேலான தரத்தையுடைய வழங்குநர்களின் ஏனைய நிலையான வருமானக் கருவிகளிலும் முன்னிறுத்தம் செய்தது. நிதியத்தின் கால நீட்சி 4.03[15] வருடங்களாக உள்ளவேளை நிதியத்தின் 100%[15] A- மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்திலான கருவிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**காட்சிப்படுத்தல் 03: நிதியத்தின் விளைவு எதிர் அளவுகோல் விளைவு[15]**


| காலம் | GAIF | NDBIB-CRISIL 364 நாள் தி.உ.ண்டியல் சுட்டி | GAIF-வருடாந்திரம் |
|---|---|---|---|
| 2023 | 26.13% | 33.52% | 26.13% |
| ஆரம்த்தில் இருந்து | 44.67% | 34.49% | 18.36% |

**செயற்திறன்கள் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான மாத இறுதி விலையின் அடிப்படையிலாகும். இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திறன் தரவுகள் கடந்த கால செயற்திறன்களை பிரதிநிதித்துவம் செய்வதுடன், இது எதிர்கால விளைவுகளுக்கான எவ்விதமான உத்தரவாதமும் அல்ல.*


கருத்திலெடுக்கப்படும் காலத்தின்போது நிதியமானது வீழ்ச்சியடையும் வட்டி வீதங்களுக்கு மத்தியில் விளைவினை மேம்படுத்துவதற்காக நீண்ட கால அளவுடைய கருவிகளில் முதலீடு செய்ததுடன், வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்போது மூலதன இலாபங்களை எய்தப்பெறும் நோக்கில் திறைசேரி முறிகளை வைத்திருந்தது. இதன் விளைவாக, CTCLSA இன்கம் வன்ட் 2023 இன் இறுதியில் ஒரு வருடாந்திர விளைவாக 26.13%[15] இனை உருவாக்கியுள்ளது.

**நிதியத்தின் முக்கிய விபரங்கள்**[1]

நிதியத்தின் கடன் தரம் - தே.சொ.பெ. இன் % ஆக




சொத்து ஒதுக்கம்




31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிதியத்தின் மொத்த தேறிய சொத்தின் பெறுமதியானது ரூபா 1127.33[15] மில்லியன் ஆகும் என்பதுடன் நிதியத்தில் 58[12] அலகு உடைமையாளர்கள் உள்ளார்கள். 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான நிதியத்தின் சேர்க்கை மற்றும் மீட்பு விலை ரூபா 14.4671[15] ஆகும்.

[1] விபரத் தாள் - வருமான நிதியம்

முதிர்வுத் தோற்றம் - தே.சொ.பெ. இன் % ஆக

